**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8069828

1. District மாவட்டம் : மதுரை PS: காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 10/2020 Date: நாள் 20.11.2020

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by PC (Amendment) act 2018 and 102 CrPC
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 19/11/2020 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.45 hrs Time to : நேரம் வரை 23.30 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20/11/2020 Time : நேரம் 14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20/11/2020 Time : நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி உதவி ஆணையாளர் அலுவலகம், மதுரை மாநகராட்சி மண்டலம்-4, மேலமாசி வீதி, மதுரை.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.த.பெரோஸ்கான் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ஜமால் பாட்சா
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் முதுநிலை வருவாய் ஆய்வாளர்
(g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① திரு. P.S. மணி, 46/20, S/o பெருமாள், நிர்வாக அலுவலர், உதவி ஆணையர் (பொறுப்பு), ② திரு. S.P. பாஸ்கர், 58/20, S/o அங்கையா பிள்ளை, வாகன டிரைவர், (TN 59 AK 7471), ③ திரு. K. முனியசாமி, 54/20, S/o காளிமுத்து, காவலர் (பணி மேற்பார்வையுடன் கீழ் இளநிலை உதவியாளர்), ④ G.J. ஜெயந்த், 58/20, S/o ஜெகநாதன், அலுவலக உதவியாளர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதம் இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed VSAC, Madurai ..................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 20/11/2020 16·00

Name: பெயர் P.M. ..............................
Rank: நிலை ......................No. எண் .........
(20/11/2020)

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

Honoured Sir, Submitted,

இன்று 20.11.2020-ம் தேதி 14.00 மணிக்கு, காவல் ஆய்வாளர் P.M.ரமேஷ் பிரபு ஆகிய நான், அலுவலில் இருந்த போது, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு. க.பெரோஸ்கான் அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நேரில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். அத்துடன் ஒப்படைத்த மதுரை மாநகராட்சி மண்டலம் எண.-4, உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் 19.11.2020, மேற்படி திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.25,400/-, மேற்படி அலுவலகத்தின் மூன்று ஆவணங்கள் மற்றும் சம்பவ இடத்தில் அலுவலர்கள் அளித்த மூன்று வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். பின்னர், உயர் அதிகாரிகளிடம் தக்க அறிவுரை பெற்று இவ்வழக்கினைப் பதிவு செய்தேன். மேற்படி தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர்: க.பெரோஸ்கான், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண் ஐ1/314/2020, நாள்: 20.11.2020. அய்யா, திடீர் இணை ஆய்வு - மதுரை மாநகராட்சி - தெற்கு மண்டலம் எண்-4 - உதவி ஆணையாளர், மண்டலம்-4 க்கு உட்பட்ட வார்டுகளில் உள்ள காலி மனை வரிவிதிப்பு செய்யும் கோப்புகளில் ஒப்புதல் வழங்க லஞ்சம் வாங்குவதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை ஆய்வு - மொத்த மாமூல் தொகை ரூ.25,400/- பணம் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக. நேற்று 19.11.2020-ம் தேதியன்று, மதுரை, மேலமாரட் வீதியில் உள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் எண்-4 அலுவலக வளாக கட்டிடத்தின் முதல் தளத்தில் உள்ள உதவி ஆணையர் அலுவலகத்திற்குட்பட்ட வார்டுகளில் உள்ள காலி மனை வரிவிதிப்பு செய்யும் கோப்புகளில் ஒப்புதல் வழங்க லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், மேற்படி மதுரை மாநகராட்சி மண்டலம் எண்-4, உதவி ஆணையர் அலுவலகத்தில் 19.45 மணி முதல் நானும் ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திரு.P.M.ரமேஷ்பிரபு மற்றும் போலீஸ் பார்ட்டியினர் காவல் ஆளிநர்களுடன் சேர்ந்து மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திடீர் இணை ஆய்வுக்காக மேலமாரட் வீதியிலுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.-4 அலுவலக வாளகத்தில் நுழைந்தபோது புறப்பட தயாராக இருந்த மாநகராட்சி அரசு வாகன எண். TN 59 AK 7471- ஐ நிறுத்தி, அந்த வாகனத்தில் இருந்த திரு. P.S. மணி, நிர்வாக அலுவலர் உதவி ஆணையர் (பொறுப்பு), உதவி ஆணையர் அலுவலகம், மதுரை மாநகராட்சி மண்டலம் - 4 என்பவரிடம் அறிமுகம்

செய்து கொண்டு திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தெரிவிக்கப்பட்டது. அவருடன் மேற்படி வாகன ஓட்டுநர் திரு S.P. பாஸ்கர் என்பவரும் உடனிருந்தார். தொடர்ந்து P.S. மணி அவர்களை சோதனை செய்த போது அவர் தன்னிடம் இருந்து ரூ.70/- பணத்தை சொந்தப்பணம் என்று கூறி ஆஜர் செய்தார். அந்தப் பணம் மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் உதவி ஆணையர் முன்னிலையில் வாகனத்தின் ஓட்டுநர் திரு S.P. பாஸ்கர் என்பவரை சோதனை செய்யப்பட்டது. தொடர்ந்து, அவர்கள் அமர்ந்திருந்த அரசு வாகன எண். TN 59 AK 7471- வாகனத்தில் திரு. P.S. மணி அவர்கள் அமர்ந்திருந்த இருக்கையின் பின்னால் இணைந்திருந்த ரெக்சின் பவுச்சில் மதுரை மாநகராட்சி என்று அச்சடிக்கப்பட்ட ஒரு காக்கி கவர் மற்றும் கத்தையாக பணமும் இருந்தது. அந்த காக்கி கவரை எடுத்து நான் பார்த்தபோது அந்த கவரின் மேல்பகுதியில் 10,000/- என்று எண்ணால் எழுதப்பட்டிருந்தது. அந்த கவரின் உள்ளே இருந்த பணக்கத்தையை எடுத்து எண்ணி பார்த்தபோது அதில் ரூ.10,000/- இருந்தது. மேலும், மற்றொரு கத்தையாக இருந்த பணத்தை எண்ணி பார்த்தபோது அதில் ரூ.9,900/- இருந்தது. மேற்படி பண கத்தைகள் குறித்து திரு. P.S.மணி அவர்களிடமும், மேற்படி வாகன ஓட்டுநர் திரு.பாஸ்கர் அவர்களிடம் விசாரித்தபோது மேற்படி பணம் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், அந்தப்பணம் எப்படி வந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும் கூறினார்கள். எனவே, மேற்படி ரூ.19,900/- என்னால் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து, அனைவரும், மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள உதவி ஆணையர் அலுவலக அறைக்கு வந்து அந்த அறை சோதனை செய்யப்பட்டது. பின்னர் உதவி ஆணையர் அறைக்கு வடக்கு கடைசியில் மேற்கு பக்கம் உள்ள வருவாய் அலுவலர்களின் அறை சோதனை செய்யப்பட்டது. பின்னர் அந்த அறையில் இருந்த காவலர் (பணியேற் பாட்டின் கீழ் இளநிலை உதவியாளர்) திரு.முனியசாமி என்பவரை சோதனை செய்தபோது அவர் தன்னிடம் இருந்து ரூ.110/- பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள வாகன நிறுத்ததில் திரு. முனியசாமி அவர்கள் நிறுத்தி வைத்திருந்த இருசக்கர வாகன எண். TN 58 X 2347 ல் உள்ள பெட்டியை அவரது முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் ரூ.5,500/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது தகுந்த விளக்கம் அளிக்க இயலாத காரணத்தால், மேற்படி பணம் ரூ.5,500/- லஞ்சப் பணம் எனக்கருதி அந்தப்பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் மற்ற அறைகள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்தது. மேற்படி திடீர் இணை ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் திறந்து இருந்த உதவி ஆணையர்

அறையும், வருவாய் உதவியாளர்கள் அறையும் சோதனையிடப்பட்டது. சோதனையின் முடிவில், நான், நிர்வாக அலுவலர் / உதவி ஆணையர் (பொறுப்பு) திரு. P.S. மணி, அவரது ஓட்டுநர் திரு.S.P. பாஸ்கர் மற்றும் காவலர் பணியேற்பாட்டின் கீழ் இளநிலை உதவியாளர் திரு.K. முனியசாமி ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விசாரணையின் போது, உதவி ஆணையாளரின் வாகனத்தின் அருகே நின்றிருந்த அலுவலக உதவியாளர் திரு.கணேஷ் அவர்கள் மேற்சொன்ன உதவி ஆணையாளரின் வாகன சோதனையின் போது அங்கிருந்து சென்று விட்டதாக திரு.மணி மற்றும் திரு.பாஸ்கரன் ஆகியோர் தெரிவித்தனர். மேற்படி திடீர் இணை ஆய்வின் போது மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் முறையாக விபரம் தெரிவிக்க இயலாமல் வைத்திருந்த பணம் மொத்தம் ரூ.25,400/- கைப்பற்றப்பட்டது. மேல் விசாரணைக்காக (1) மதுரை மாநகராட்சி மண்டலம்-4 வருகைப் பதிவேடு 2020 (2) மண்டலம்-4 உதவி ஆணையாளர் தினசரி ஆய்வுக் கூட்டம் வருகைப் பதிவேடு வாகனத்தின் ஓட்டுநர் திரு. S.P. பாஸ்கர் ஆஜர் செய்த (3) மாநகராட்சி பொலிரோ வாகன எண். TN 59 AK 7471- க்குரிய லாக் புக் ஆகிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ, உடைமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. இந்த திடீர் ஆய்வு குறிப்புரை இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி குறிப்புரையில் நானும், திரு. P.S. மணி, திரு. S.P. பாஸ்கர், திரு.K. முனியசாமி, மற்றும் ஆய்வாளர் திரு.P.M.ரமேஷ் பிரபு ஆகியோர் கையொப்பமிட்டு அதன் நகல் ஒன்றினை திரு. P.S. மணி அவர்களிடம் வழங்கி ஒப்புகை பெறப்பட்டது.

மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின் போது, திரு. P.S. மணி, நிர்வாக அலுவலர் உதவி ஆணையர் (பொறுப்பு) அவர்கள் மற்றும் அவரது ஓட்டுநர் திரு.S.P. பாஸ்கர் ஆகியோர் அமர்ந்திருந்த மதுரை மாநகராட்சி அரசு வாகன எண். TN 59 AK 7471-ல் திரு. P.S. மணி அவர்கள் அமர்ந்திருந்த இருக்கையின் பின்னால் இணைந்திருந்த ரெக்சின் பவுச்சில் ஒரு மதுரை மாநகராட்சி என்று அச்சடிக்கப்பட்ட காக்கி கவர், அதிலிருந்த பணம் ரூ.10,000/-, தனி கத்தையாக இருந்த பணம் ரூ.9,900/- , காவலர் (பணியேற் பாட்டின் கீழ் இளநிலை உதவியாளர்) திரு.முனியசாமி அவர்களின் இருசக்கர வாகன எண். TN 58 X 2347 ல் உள்ள பெட்டியில் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.5,500/- ஆக மொத்தம் ரூ.25,400/- மற்றும் திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் (1) மதுரை மாநகராட்சி மண்டலம்-4 வருகைப் பதிவேடு 2020 (2) மண்டலம-4 உதவி ஆணையாளர் தினசரி ஆய்வுக் கூட்டம் வருகைப் பதிவேடு வாகனத்தின் ஓட்டுநர் திரு. S.P. பாஸ்கர் ஆஜர்

செய்த (3) மாநகராட்சி பொலிரோ வாகன எண். TN 59 AK 7471- க்குரிய லாக் புக் ஆகிய ஆவணங்கள் மற்றும் திரு.P.S.மணி, திரு.S.P.பாஸ்கர், திரு.K.முனியசாமி, ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன்.

எனவே மேற்படி மதுரை மாநகராட்சி மண்டலம்-4, உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பணிபுரியும் 1) திரு. P.S. மணி, நிர்வாக அலுவலர், உதவி ஆணையர் (பொறுப்பு), 2) திரு.S.P.பாஸ்கர், வாகன ஓட்டுனர், 3) திரு.K.முனியசாமி, காவலர் (பணியேற் பாட்டின் கீழ் இளநிலை உதவியாளர்), 4) திரு.கணேஷ், அலுவலக உதவியாளர் ஆகியோர் வார்டுகளில் உள்ள காலி மனை வரிவிதிப்பு செய்யும் கோப்புகளில் ஒப்புதல் வழங்க லஞ்சம் பெறப்பட்டதன் மூலம் சட்ட விரோதமான ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. எனவே, மேற்கண்ட அலுவலர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு இந்தப் புகார் மனுவை தங்களிடம் அளிக்கிறேன். ஒப்பம்/- XXXXX 20.11.2020 க.பெரோஸ்கான்) முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1 திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் 19.11.2020. 2. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள்- மூன்று. 3. கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் - மூன்று. 4. கைப்பற்றப்பட்ட ரொக்கம் ரூ.25,400/-.

Sir, Received this report this day (20.11.2020) at 14.00 hrs along with Joint Surprise Check Proceedings (dated 19.11.2020), three statements, three Seized documents and Cash Rs.25,400/- . After obtaining permission from the Superior Officers, I (P.M.Ramesh Prabu, Inspector of Police, V&AC, Madurai) registered a case in Madurai V&AC Crime No. 10/2020 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. on 20.11.2020 at 15.00 hrs. Sd/- XXXXX (P.M.Ramesh Prabu), Inspector of Police, V&AC, 20.11.2020.

The original FIR along with Joint Surprise Check Proceedings (dated: 19.11.2020), special report, dated 20.11.2020 of Tr. K.Ferozkhan, and 3 statements are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

Inspector of Police
V&AC
Madurai.
20/11/20